# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.118/மா/2022**

**நாள். 20.09.2022**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

**உதவி ஆணையர்,**
**மண்டலம் - 02,**
**மதுரை மாநகராட்சி,**
**மதுரை.** – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 30.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் **02.08.2022–ல்** பெறப்பட்டு **118/மா/2022** என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 30.07.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாநகராட்சி வார்டு **–1,** மண்டலம்–02(வடக்கு) மதுரை to திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் புதுவிளாங்குடி அருகில் செந்தாமரை கார்டன் என்னும் பெயர் கொண்ட இடத்தில் வீட்டு மனைப்பிரிவுகளாக பல மனைகள் பிரிக்கப்பட்டு உள்ளன. இதில் மாநகராட்சிக்கு சொந்தமான 'பூங்கா' இடம் பட்டா எண் **1961,** புல எண்கள் **56/1D** மற்றும் **56/3A1D** விஸ்தீரனம் **11.03** ஹெக்டர் ஆகும். (சுமார் 27½ சென்ட் ஆகும்) தற்போது சந்தை மதிப்பு **2.15** கோடியாகும். இவ்விடத்தை கம்பி முள்வேலி அமைத்து பட்டாவில் உள்ளபடி அளந்து

அத்துமால் காண்பித்து மதுரை மாநகராட்சி பூங்காவிற்கு சொந்தமான இடம் என்று விளம்பர பலகை வைக்க வேண்டும் என்று 25.07.2022 தேதியில் பதிவு தபாலில் (1) உதவி ஆணையர், மண்டலம்–02(வடக்கு) கே.புதூர் (2) செயற்பொறியாளர் (திட்டம்) (பொது) மதுரை–2 மாநகராட்சி அவர்களுக்கு கோரிக்கை வைத்தேன்.

எனவே எனது கோரிக்கையை ஏற்று மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தை பாதுகாத்து அளந்து கல் ஊன்றி விளம்பர பலகை வைக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் மனு மீது அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற 06.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர், மண்டலம்–2(வடக்கு) தனது 23.08.2022 மற்றும் 02.09.2022 நாளிட்ட அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி, மண்டலம்–2 (வடக்கு) வார்டு 1ல் 2 பிட் கிராமத்தில் பொற்றாமரை நகர் புல எண்கள் 97/1F. 97/1G மற்றும் செந்தமாமரை கார்டன் புல எண் 56/1D, 56/3A1D ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகளை அகற்றி பூங்கா அமைப்பதற்காக திரு. மயில்சாமி என்பவரிடமிருந்து மனு வரப்பெற்றது.

விளாங்குடி 2 பிட் கிராமத்தில் பொற்றாமரைநகர் மற்றும் செந்தாமரை கார்டன் ஆகிய பெயர்களில் அமைக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட புலங்களை ஏற்கனவே மாநகராட்சியால் வருவாய்துறையினர் மூலம் உட்பிரிவுகள் செய்து பட்டா எண் 1850,1851 புல எண்கள் 97/1F பரப்பு 0.01.22 ஏர்ஸ், 97/1G பரப்பு 0.02.99 ஏர்ஸ், பட்டா எண் 1961, புல எண் 56/1D, 56/3A1D பரப்பு 0.11.03 ஏர்ஸ், ஆணையாளர், மதுரை மாநகராட்சி – பூங்கா என வருவாய் கிராம கணக்குகளில் மாறுதல்கள் செய்யப்பட்டு, மேற்கண்டுள்ள பூங்காக்களை மாநகராட்சி சொத்துப்பட்டியலில் இணைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்டுள்ள பூங்காக்களை இவ்வலுவலகப்பணியாளர்கள் மூலம் வருவாய் கிராம கணக்குகளில் உள்ளவாறு நில அளவை பணி செய்து தற்காலிக சிறிய அளவிலான ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அதனை தொடர்ந்து மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா என்பதற்கான அறிவிப்பு பலகைகளும் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

விளாங்குடி 2 பிட் கிராமம் விஸ்தரிப்பு பகுதியாக இருந்து மதுரை மாநகராட்சியின் பழைய மண்டலம் 1ல் நிர்வகிக்கப்பட்டு, நிர்வாக ரீதியாக வார்டு வரையறை செய்யப்பட்டு தற்போது மண்டலம் 2 (வடக்கில்) இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதில் பொற்றாமரைநகர் விரிவாக்கம் புல எண் 97/1F, 97/1G மனைப்பிரிவு அமைந்துள்ள பகுதி கீழ்புறமும் மற்றும் மேல்புறமும் அடர்ந்த கருவேல மரங்களாலும், தென்புறம் வைகை நதியினாலும் சூழ்ந்துள்ள பகுதியாக உள்ளது. இப்பூங்காவிற்கான புலத்திலும் அறிவிப்பு பலகை நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் முள்வேலி அமைத்தல் தொடர்பாக நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு பின்வரும் காலங்களில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.09.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. மனுதாரர் 06.09.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" மதுரை மாநகராட்சி, வார்டு –1, மண்டலம்–02(வடக்கு) மதுரை–திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை புதுவிளாங்குடி அருகில் செந்தாமரை கார்டன் என்னும் பெயர் கொண்ட இடத்தில் வீட்டுமனை பிரிவுகளாக பல மனைகள் பிரிக்கப்பட்டு உள்ளன. அவ்வாறு பிரிக்கும்போது மாநகராட்சி பொதுப்பயன்பாட்டிற்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடம் பட்டா எண் 1961, புல எண்கள் 56/1D மற்றும் 56/3A1D விஸ்தீரனம் 11.03 ஹெக்டேர் ஆகும். மேற்கண்ட இடத்தில் ஒரு சில இடங்களில் நில ஆக்கிரமிப்பு நடந்து வருகின்றன. மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் ஏற்படாதவாறு அங்கு கம்பி முள்வேலி அமைத்து, பட்டாவில் உள்ளபடி அளந்து, அத்துமால் காண்பித்து மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் என்று விளம்பர பலகை வைப்பதற்கும், அவ்விடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பூங்கா அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் இருவரும் 06.09.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, வார்டு–1, மண்டலம்–02 (வடக்கு) மதுரை–திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை புதுவிளாங்குடி அருகில் செந்தாமரை கார்டன் என்கின்ற இடத்தில் பட்டா எண் 1961, புல எண்கள் 56/1D மற்றும் 56/3A1D-;ல் மனைப்பிரிவுகள் பிரிக்கப்பட்டு தனியரால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மனைப்பிரிவு ஏற்படுத்தியபோது, மதுரை மாநகராட்சிக்கு பூங்கா பயன்பாட்டிற்காக 11.03 ஏர்ஸ் இடம் லே அவுட் உரிமையாளர்களால் ஒதுக்கப்பட்டது. தற்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. எனினும், மேற்கண்ட பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை சர்வேயர் மற்றும் உதவி செயற்பொறியாளர்(திட்டம்) ஆகியோரைக்கொண்டு மீண்டும் அளவீடு செய்தும், பட்டா எண், சர்வே எண் மற்றும் சப் டிவிசன் எண் ஆகியவற்றைக்கொண்டு ஒப்பீடு செய்தும் ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை 1 மாத காலத்திற்குள் அகற்றிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையர்(வடக்கு) அவர்களின் 2.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி, மண்டலம் -02ஐச் சேர்ந்த செயற்பொறியாளர், உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராடசி உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது மனுவில் மதுரை மாநகராட்சி வார்டு–1, மண்டலம்–02(வடககு) மதுரை to திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை புதுவிளாங்குடி அருகில் செந்தாமரை கார்டன் என்னும் பெயர் கொண்ட இடத்தில் வீட்டு மனைப்பிரிவுகளாக பல மனைகள் பிரிக்கப்பட்டு உள்ளன என்றும், இதில் மாநகராட்சிக்குச் சொந்தமான பூங்கா இடம் பட்டா எண் 1961, புல எண்கள் 56/1D மற்றும் 56/3A1D விஸ்தீரனம் சுமார் 27½ சென்ட் ஆகும் எனவும் தற்போதைய சந்தை மதிப்பு 2.15 கோடியாகும் என தெரிவித்து ஆக்கிரமிப்பு ஏதும் ஏற்படாதவாறு இவ்விடத்தை கம்பி முள்வேலி அமைத்து பட்டாவில் உள்ளபடி அளந்து அத்துமால் காண்பித்து கல் ஊன்ற வேண்டும் எனவும் மதுரை மாநகராட்சி பூங்காவிற்கு சொந்தமான இடம் என்று விளம்பர பலகை வைக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சி, வார்டு–1, மண்டலம்–2 (வடக்கு) மதுரை–திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை புதுவிளாங்குடி அருகில் செந்தாமரை கார்டன் என்கின்ற இடத்தில் பட்டா எண் 1961, புல எண்கள் 56/1D மற்றும் 56/3A1Dல் மனைப்பிரிவுகள் பிரிக்கப்பட்டு தனியாரால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதும் மேற்கண்ட மனைப்பிரிவு ஏற்படுத்தியபோது, மதுரை மாநகராட்சிக்கு பூங்கா பயன்பாட்டிற்காக 11.03 ஏர்ஸ் இடம் லே அவுட் உரிமையாளர்களால் ஒதுக்கப்பட்டது என்பதும் தற்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்பதும் செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்தும், உதவி ஆணையாளரின் அறிக்கையிலிருந்தும் அறியமுடிகிறது.

செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்கண்ட செந்தாமரை கார்டனில் பட்டா எண்.1961 புல எண்கள் 56/1D மற்றும் 56/3A1D–ல் மாநகராட்சி நில அளவையரைக்கொண்டு அளவீடு செய்தும் பட்டா எண், சர்வே எண் மற்றும் சப்டிவிசன் எண் ஆகியவற்றைக்கொண்டு ஒப்பீடு செய்தும் ஆக்கிரமிப்புகள் ஏதேனும் இருப்பின் விதிகளுக்குட்பட்டு அதனை 45 நாட்களுக்குள் அகற்றிட தேவையான நடவடிக்கை எடுத்தும், பூங்காவை சுற்றிலும் பட்டாவில் உள்ளபடி முழுமையாக அளந்து அத்துமால் காண்பித்தும், கல் ஊன்றி நான்குபுறமும் முள்கம்பி வேலி அமைத்தும், மாநகராட்சிக்கு சொந்தமான இடம் என்ற அறிவிப்பு பலகையினை வைத்திடுமாறும் மதுரை மாநகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நேர்வில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்மந்தான அறிக்கையை 2 மாதகாலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் மாநகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Zonal Officials in charge of the lands of Corporation should be proactive and preventive in their action to preclude any chances of the lands to go into the hands of anti social elements, encroachers and land grabbers instead of waiting for complaints made by social activists and vigilante groups who are focussed on violations of negative kind as far as issues of land encroachments are concerned. The Commissioner, Madurai Corporation is instructed to issue strict directions to the Zonal Officials in charge of land to guard against misuse of lands belonging to the Corporation. Severe disciplinary action should be launched against the functionaries who are slack and indifferent by winking at such encroachments with ulterior motives. The DMA is requested to reinforce this observation throughout the State during

review meetings and by sending detailed circular reiterating the existing instructions to safeguard the valuable lands that belong to the Corporations.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.

2. ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3. உதவி ஆணையர்,
மண்டலம் - 2,
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக